(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

CNR.No.TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW.4

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 25.8.2021.

முதல் விசாரணை:

நான் பள்ளிபாளையம் கன்னிமார்காட்டில் குடியிருக்கிறேன். டெக்ஸ்டைலில் வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் 3 வரையானவர்களை தெரியும். ஆஜர் எதிரி மகேந்திரனைத் தெரியும். எதிரி கன்னியப்பனை தெரியும். 27.10.2018ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் தேர்முட்டி பக்கத்தில் உள்ள எனது மனைவிக்கு உரிமையான கட்டிடத்தை நீதிமன்றத்திலிருந்து ஆணையர் அளப்பதற்கு வருவதாக அறிவிப்பு வந்திருந்தது. அதனால் காலை 10.00 மணியளவில் நானும், எனது மாமனார் கணேசன், மைத்துனர் வடிவேல், கோபால் ,மோகன் ஆகியோர் அங்கு சென்றிருந்தோம். நாங்கள் சென்ற பத்து நிமிடத்திற்குள் நீதிமன்ற ஆணையர், சர்வேயர், விஏஓ ஆகியோர் வந்தனர். இடத்தைஅளக்கும்போது அதை எனது கைபேசியில் வீடியோ பதிவுசெய்தேன். அப்போது மகேந்திரன் சர்வேயர் அளக்க சென்றபோது அவரது கையை பிடித்து இழுத்து தகராறு செய்தார். நான் வீடியோ எடுத்ததை பார்த்து கன்னியப்பன் கையால் என் கை மீது அடித்ததில் எனது கைபேசி கீழே விழுந்தது. நான் விழுந்த கைபேசியை எடுக்க கீழே குனிந்த போது அருகில் பழக்கடையில் இருந்த அருவாளை எடுத்து என்னை தாக்க வந்தார். அவருடன் வந்த ஆட்கள் அவரை அடிக்க சொல்லி சொன்னார்கள். இவை அனைத்தும் எனது கைபேசி வீடியோவில் பதிவாகியுள்ளது. எதிரிகள் இருவரும் என்னை தேவடியா பயனே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். தாக்க வந்த எதிரிகளை எங்களுடன் வந்த மோகன், கோபால் ஆகியோர் விலக்கிவிட்டனர். அங்கு வந்திருந்த காவல்துறையினர் அமைதியாக இருந்தால் அளக்க சொல்வோம், இவ்வாறு தகராறு செய்தால் ரிமான்ட்செய்து விடுவதாக எச்சரித்தார்கள். நாங்கள் அமைதியாக இருந்தோம். நீங்கள் அளவீடு செய்யுங்கள், எந்த கோர்ட், எந்த ஜட்ஜ் ஆக இருந்தாலும் இந்த சொத்தை பிரித்து வாங்க முடியாது என்று பேசினார். அதுவும் வீடியோவில் பதிவாகியுள்ளது. பின்னிட்டு இடத்தை அளந்தார்கள். அதன் பின்னர்

எங்களை தாக்கியதற்காக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் விசாரித்தார்கள்.
குறுக்கு விசாரணை.-

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினம் என்ன என்றால் 27.10.2018. அ.சா.1 கணேசன் எனக்கு என்ன உறவு என்றால் மாமனார். எனது 161(3) குவிமுச வாக்குமூலத்தில் கணேசன் எனது நண்பர் என பதிவு செய்யப்பட்டுள்ளதென்றால் நான் காவல்துறையிடம் எனது மாமனார் என்று தான் சொன்னேன். அவர்கள் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. காலை எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததென்றால் சுமார் 9.45 முதல் 10.00 மணிக்குள் நடந்தது. நாங்கள் அங்கு சென்றபோது தாவா கட்டிடத்தில் சேதம் எதுவும் இருந்ததா என்றால் நாங்கள் சென்றபோது கதவு மட்டும் வின்டோ உடைக்கப்பட்டிருந்தது. போலிசார் விசாரணையின்போது கதவு மற்றும் ஜன்னல்களுக்கு எந்த சேதமும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உடைந்திருந்ததாக தான் சொன்னேன். சர்வேயரும் , கமிஷனரும் எவ்வளவு நேரத்திற்குள் வந்திருப்பார்கள் என்றால் நாங்கள் சென்ற 10 அல்லது 20 நிமிடத்திற்குள் வந்திருப்பார்கள். சர்வேயரும், கமிஷனரும் மட்டும் தான் வந்தார்களா இல்லை காவல் துறையினரும் வந்தார்களா என்றால் முதலில் சர்வேயரும், கமிஷனரும் வந்தார்கள், பின்னர் காவல் துறையினர் வந்தனர். காவல் துறையினர் வந்த பின்னிட்டு அளந்தார்களா என்றால் போலிசார் இருந்தார்கள். நான் வீடியோ எடுக்கும் போது மகேந்திரன் என்னிடம் தகராறு செய்தபோது காவல்துறையினர் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. நான் எடுத்த வீடியோ பதிவில் மகேந்திரன் அரிவாள் எடுத்து என்னை வெட்ட வந்தது பதிவாகியுள்ளதா என்றால் இல்லை, அதற்குள் மொபைல் கீழே விழுந்துவிட்டது. அரிவாள் எங்கிருந்து எடுத்து வந்தார் என்றால் பழக்கடையில் இருந்து எடுத்து வந்தார். நான் பதிவு செய்த வீடியோவில் இரவே எஸ்.பி அலுவலகத்தில் புகார் கொடுத்ததாக நான் சொல்வதாக பதிவாகியுள்ளதென்றால் சரியல்ல. எதிரிகள் அடிக்க வரும்போது காவல்துறையினர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்கள் தடுக்கவில்லையா என்றால் வார்னிங் செய்தார்கள். காவல் துறையினர் எதிரிகளை கைது செய்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடம் ஜனநடமாட்டம் இல்லாத இடமா, அல்லது கூட்டமான இடமா என்றால் கூட்டமான இடம். அங்கு கூடியிருந்தவர்கள் எதிரிகள் வெட்ட வரும்போது தடுக்கவில்லையா என்றால் இல்லை. தாவா கட்டிடம் எனக்கு சம்பந்தப்பட்டதா என்றால் என் மனைவிக்கு சம்பந்தப்பட்டது. அவருக்கு தான் அழைப்பாணை நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்றது. எனது மனைவி சம்பவ இடத்தை அளப்பதற்கு வந்தாரா என்றால் இல்லை. நான் அவருக்கு பதிலாக சென்றேன். எனது மனைவி எனக்கு பதிலாக எனது கணவர் சம்பவ இடத்தை பார்வையிடும் போது உடன் இருப்பார் என்று நீதிமன்ற ஆணையருக்கு கடிதம் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. ஆணையர் கேட்கவில்லை, அதனால் கொடுக்கவில்லை. கோபால் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் எனது மாமனாரின் ஊரை சேர்ந்தவர். கோபால் என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. ஆணையரும், சர்வேயரும் கட்டிடத்தை அளந்து முடித்தார்களா என்றால் கன்னியப்பன் அளக்க சொன்னார், சர்வேயரும் ஆணையரும் அளந்தார்கள். ஆனால் முடித்துவிட்டார்களா என்ற எங்களுக்கு தெரியாது, நாங்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். எனக்கு சம்பவத்தின் போது காயம் எதுவும் ஏற்பட்டதா என்றால் வெளிக்காயம் எதுவும் இல்லை. எனக்கு கையில் அடித்ததில்

காயம்பட்டதற்காக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, வீசிங் இருந்ததால் மருத்துவமனைக்கு சென்றேன். காவல் துறையினர் எத்தனை பேர் அங்கு வந்திருந்தனர் என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை வீடியோ பதிவு செய்ததை அரசு அலுவலகத்திற்கு எதுவும் நேரடியாக ஒளிபரப்பினேனா என்றால் இல்லை. நான் மட்டும் தான் வீடியோ எடுத்தேனா இல்லை வேறு யாரும் எடுத்தார்களா என்றால் நிறையபேர் எடுத்தார்கள். காவல் துறையினர் வீடியோ எடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. காவல்துறையினர் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவ தேதியிலிருந்து 1 வாரத்திற்குள் விசாரித்தார்கள். விசாரித்தபோது காவல் துறையினர் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. காவல்துறையினர் விசாரித்தபோது நான் கையொப்பம் எதுவும் செய்தேனா என்றால் இல்லை. விஏஓ, சர்வேயர், கமிஷனர் அனைவரும் ஒன்றாக வந்தார்களா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. மேற்படி நபர்கள் வரும்போது எதிரிகள் கையில் ஆயுதம் இருந்ததா என்றால் தெரியாது. நாங்கள் அங்கு சென்றபோது மகேந்திரனும், கன்னியப்பனும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்றால் நான் கவனிக்கவில்லை. மகேந்திரனும், கன்னியப்பனும் அங்கிருந்தார்களா என்றால் நிறையபேர் இருந்தார்கள், நான் கவனிக்கவில்லை. யாரை அசிங்கமாக திட்டினார்கள் என்றால் முதலில் கணேசனை திட்டினார்கள், பிறகு நான் வீடியோ எடுத்ததால் என்னை திட்டினார்கள். காவல் துறையினர் வந்தவுடன் எதிரிகள் எங்களை நிலத்தை அளக்கவிடவில்லை என எதுவும் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. ஆனால் காவல்துறையினர் 100 க்கு அழைப்பு வந்ததால் தாங்கள் வந்ததாக சொன்னார்கள். 100 க்கு யார் அழைத்ததாக சொன்னார்கள் என்றால் மகேந்திரன் அழைத்ததாக சொன்னார்கள். என்ன காரணத்திற்காக 100 க்கு போன் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரேனும் நிலத்தை பார்வையிடும்போது வந்தார்களா என்றால் வந்திருந்தார்கள். ஆனால் எப்போது வந்தார்கள் என்று தெரியாது. ஆனால் அளக்க வந்திருந்தார்கள். நாங்கள் சென்று பார்க்கும் போது கட்டிடம், கதவு, ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருந்ததாக சொல்லியுள்ளேன், உடனடியாக காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தோமா என்றால் நாங்கள் சென்ற 10 நிமிடங்களில் கமிஷனர் வந்ததால் அதை முடித்துவிட்டு புகார் கொடுக்கலாம் என்று நினைத்தோம். நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பே மகேந்திரன் 100 க்கு அழைத்து தகவல் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் வீடியோ எடுத்த மொபைலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது மாமனாரிடம் நகல் கொடுத்தேன். அவர் போலிசாரிடம் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. நான் போனதிலிருந்தே வீடியோ பதிவு செய்ய ஆரம்பித்தேனா என்றால் கன்னியப்பனும் மகேந்திரனும் தகராறு செய்ய ஆரம்பித்ததும் எடுக்க ஆரம்பித்தேன். நிலத்தை அளக்க ஆரம்பிக்கும் வரை எடுத்தேன். தொடர்ந்து வீடியோ பதிவு செய்யவில்லை, மகேந்திரனும் , கன்னியப்பனும் பிரச்சினை செய்த போதெல்லாம் வீடியோ எடுத்தேன். அ.சா.1 எனது மாமனார் என்பதால் நடக்காத ஒரு விஷயத்தை நடந்ததாக சொல்லி சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எதிரிகளுக்கு எதிராக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை.- இல்லை.